முருகப்பெருமான் துணை

# மகான் சங்கரமகரிஷி அருளிய துல்லிய ஆசி நூல்

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.01.2024, செவ்வாய்கிழமை

1. தவசியே கலியிடரை வெல்ல
தனிப் பெருஞ் சக்தி கூட்டி
அவதாரம் எடுத்த அரங்கனே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது கலைதிங்கள்
குறைவிலா மூவையோர் திகதி குஜன் வாரம்
(சோபகிருது வருடம் தை மாதம் 16 ம் நாள், 30.01.2024, செவ்வாய்கிழமை)
தெரிவிப்பேன் துல்லிய ஆசிதனை
தேசிகன் கேட்க சங்கர மகரிஷி யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழி காட்டும் அரங்கன்
ஞானமே கலித்துன்பமகற்றும்
ஞாலமதில் சிறந்த வழிகாட்டல் ஆகும்
4. ஆகவே அரங்க மகானிடம்
அனைவரும் சரணாகதி கொண்டு
வகைபட அனுகி தீட்சையை
வணங்கி மக்களெல்லாம் ஏற்று
5. ஏற்றுமே ஞானபண்டிதன் வழிபாடு
எல்லாம் வேண்டி செய்துவர
ஆற்றல்பட வேண்டுகின்ற நல்
அனைத்து வரமும் அரங்கேறி
6. அரங்கசேறி ஆறுமுகன் ஆசியும்
அனைவருக்கும் வேலவன் காட்சியும்
வரங்களாகக் கிட்ட நேரும்
வருங்காலம் அறியும் வல்லமை
7. வல்லமையான உலகை படைக்கும்
வாய்ப்பும் தகுந்தச் சூழலும்
சொல்லவே குருமார்க்கம் வழி
செகத்தோர் கண்டு சிறப்பர்

8. சிறப்பான ஞான பலத்துடன்
சித்திமிகு ஜீவதயவு காட்டும்
அறப்பணி அன்னதானப் பணி
அரங்கமகான் துவக்கி வழி நடத்த

9. வழிமொழிந்து உலக மக்கள்
வரவேற்று தரும சேவையில்
தெளிவுடனே பொருளுதவி செய்து
தொண்டுடன் அரங்கன் புகழை

10. புகழை உலகெல்லாம் கொண்டு
புண்ணியமார்க்கமும் தழைக்க
மிகையான சேவை ஆற்றிட
மேலவர்கள் தானாய் இறங்கி

11. இறங்கி வந்து அருளுகின்ற
இணையிலா ஞானபூமியாக
வரங்கள் பெருகி மாற்றமதும்
வையகம் கண்டு சிறக்கும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–